Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 70 / 2019** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அ.சா.12<br><br>Defense<br>Court |
| Name | முகமது இத்ரிஷ் |
| Father's Name | முகமது காசிம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.08.2022.** | |

முதல் விசாரணை

நான் தற்சமயம் மதுரை கரிமேடு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 17.11.2018 அன்று தோகமலை காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது சிந்தாமணிப்பட்டி காவல்நிலைய குற்ற எண். 199/2018 வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் புரவிடம் இருந்து மேல்புலன் விசாணைக்கு எடுத்துக்கொண்டு அன்று காலை 6.50 மணியளவில் வழக்கின் வாதி சந்தணதுறை என்பவர் சம்பவ இடத்தை காட்ட சாட்சிகள் சத்தியசீலன், பொன்னுசாமி ஆகியோர் முன்பு காலை 7.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.18. பின்னர் சாட்சிகள் சந்தனதுறை, சத்தியசீலன் பொன்னுசாமி காளியப்பன், முனியப்பன், பழனிச்சாமி

ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் சோமரசன் பேட்டை காவல்நிலைய குற்ற எண். 230/2018, குளித்தலை காவல்நிலைய குற்ற எண்.565/2018 ஆகிய வழக்குகளில் திருச்சி மத்திய சிறையில் இருந்து வருவதாக தெரியவந்தது. சம்புரதாய கைது செய்ய நடவடிக்கை எடுத்து கைதிகள் அசோக்குமார், சங்கப்பிள்ளை என்ற சங்கர், சுப்ரமணி, சுரேஷ், தேவா (எ) தேவராஜ், சந்தணபாண்டியன், சூர்யா (எ) பாலசுப்ரமணியன் ஆகியோரை 24.11.2018 மதியம் 2.40 மணி முதல் 2.47 மணி வரை சம்புரதாய கைதுசெய்தேன். குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1ல் பிடி வாரண்ட் பெற்று எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுத்தேன். பிடி வாரண்ட் பெற கொடுத்த வேண்டுதல் கடிதம் அ.சா.ஆ.19. பின்னர் எதிரிகள் சந்தனபாண்டியன், சுரேஷ், சுப்ரமணி ஆகியோரை காவல்துறை காவலுக்கு எடுக்க வேண்டி குற்றவியல் நீதிமன்ற எண்.1 ல் வேண்டுதல் கடிதம் கொடுத்தேன். மேற்படி சுப்ரமணி, சுரேஷ், சந்தனபாண்டியன் ஆகியோரை காவல்துறை காவலில் எடுத்து விசாரிக்க குற்றவியல் நடுவர் நீதிமன்ற எண்.1 வழங்கிய உத்திரவு அ.சா.ஆ.20. உத்திரவுப்படி மேற்படி 3 எதிரிகளையும் காவல்துறை காவலுக்கு எடுத்து சாட்சிகள் கார்த்திக், கோபாலகிருஷ்ணன் அகியோர் முன்னிலையில் எந்தவித துன்புறுத்தலும் செய்யாமலும் ஆசை வார்த்தை கூறாமலும் வழக்கு விவரங்களை எடுத்துக் கூறி எதிரிகளை விசாரித்து 3 எதிரிகளிடம் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் முறையே அ.சா.ஆ.21, அ.சா.ஆ-22, அ.சா.ஆ-23. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சந்தனபாண்டியன் என்பவரிடம் இருந்து சம்பவ இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்த அடிப்பகுதி 11 செ.மீ சுற்றளவும், மேல்பகுதி 12.5 செ.மீ சுற்றவும் கொண்ட 60 செ.மீ நீளமுடைய மர தடி ஒன்றினை கைப்பற்றினேன். எதிரி சுரேஷ் அவரது வீட்டில் ஓட்டு தாழ்வாரத்தில இருந்து எடுத்து ஆஜர் செய்த ரோஸ் நிற பாலிதின் கவர் அதன் உள்ளே **2000** ரூபாய் நோட்டுகள் 3, 500 ரூபாய் நோட்டுகள் 21, 200 ரூபாய் நோட்டுகள் 4, 100 ரூபாய் நோட்டுகள் 27 ஆகியவைகளை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரி சுப்ரமணியனிடம் அவரது வீட்டு ஓட்டு தாழ்வாரத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்திய டி.எண்.48 எஇ 7027 எண் கொண்ட ஸ்பெலண்டர் ப்ளஸ் இருச்சக்கர வாகனத்தை கைப்பற்றினேன். வெள்ளை நிற பாலிதின் கவர் ஒன்று அதன் உள்ளே 2000 ரூபாய் நோட்டுகள் 6, 500 ரூபாய் நோட்டுகள் 16 ஆகியவற்றை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி ரூபாய் நோட்டுக்களின் எண் படிவம் 91ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் முறையே அ.சா.ஆ.24, அ.சா.ஆ-25, அ.சா.ஆ-26. பின்னர் சாட்சிகள் கார்த்திக், கோபாலகிருஷ்ணன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நீதிமன்ற காவலுக்கு எடுத்த எதிரிகளை

நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவல் அடைப்பு செய்யப்பட்டது. அந்த வேண்டுகோள் கடிதம் முறையே அ.சா.ஆ-27, அ.சா.ஆ.28. பின்னர் எதிரிகள் சங்கப்பிள்ளை (எ) சங்கர், தேவா (எ) தேவராஜன், இந்த வழக்கின் வாதி சந்தானதுறை என்பவர் எதிரிகளை அடையாள அணிவகுப்பு நடத்தவேண்டி நீதிமன்றத்தில வேண்டுதல் கடிதம் கொடுத்தேன். அந்த நீதிமன்ற உத்திரவின்பேரில் திருச்சி மத்திய சிறையில் கனம் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர் அவர்கள் அடையாள அணிவகுப்பு நடத்தி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் காயம்பட்ட சாட்சி காளியப்பன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் முருகேசன் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்றேன். பின்னர் இவ்வழக்கில் சாட்சிகள் குற்றவியல் நீதிமன்ற நடுவர் எண்.1 அவர்கள் மற்றும் சிந்தாமணிப்பட்டி காவல்நிலைய தலைமை காவலர் திருமதி லதா, வழக்கு பதிவு செய்த சார் ஆய்வாளர் பிரபு, குளித்தலை ஆய்வாளர் பாஸ்கரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் 1 முதல் 8 வரையானவர்கள் மீது இவ்வழக்கின் சட்டப்பிரிவு 394 இ.த.ச லிருந்து சட்டப்பிரிவு 341, 395 உடன் இணைந்த 397 இ.த.ச வாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து குற்ற இறுதியறிக்கை 30.05.2019 ல் தாக்கல் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ-29. எதிரி சுப்ரமணியத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட டிஎண்.48 எஇ 7027 எண் கொண்ட கருப்பு நிற Hero Spelender இருச்சக்கர வாகனம் சா.பொ.ஆ.2. எதிரி சுரேஷ் என்பவரின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட ரோஸ் நிற பாலிதின் கவர் சா.பொ.ஆ.3. எதிரி சுப்ரமணியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வெள்ளை நிற பாலிதின் கவர் சா.பொ.ஆ.4.

1 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை பார்வையிட்டேன். அ.சா.ஆ 1 புகார் மனுவில் பணம் திருட்டு போனதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. எனது விசாணையில் ரூ.52,940 திருடு போனதாக தெரியவந்ததாக குறிப்பிட்டுள்ளேன் அந்த முரண்பாடு குறித்து தனியாக விசாரித்துள்ளேனா என்றால இல்லை. நான் சொன்னவிதத்தில் அ.சா.1 ஐ விசாரிக்காமல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் 18.10.2018 நடந்துள்ளது. காவல் நிலையத்திற்கு மேற்படி சம்பவம் பற்றி 16.11.2018 ல் தகவல் கிடைத்தது. இடைப்பட்ட காலத்தில் அ.சா.1 பணத்தை வங்கியில் செலுத்தினாரா இல்லையா என்று நான் ஆவணங்களை பார்வையிடவில்லை. நான் எனது இறுதியறிக்கையில் 1ம் எதிரி 3ம் எதிரிக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு தகவல கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் இல்லை. தகவல் தெரிவித்ததாக தான் கூறியுள்ளேன் தொலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தாக கூறவில்லை. நேருக்கு நேர் தகவல் தெரிவித்தாக குறிப்பிட்டுள்ளேன். எதிரி சூர்யா கொடுத்ததாக சொல்லப்படும்

ஒப்புதல் வாக்குமூலத்தில் போன் மூலம் தகவல் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். அதற்கு ஆதரவாக கால் டிடைல்ஸ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கைப்பேசியை நான் கைப்பற்றவில்லை. மேற்கண்ட விதத்தில் ஜெயகாந்தனுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்பதல் தான் மேற்சொன்ன கால் டிடைல்ஸ் மற்றும் செல்போன் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. 4,5,7 எதிரிகள் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1வது எதிரியை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால்சரியல்ல. இந்த வழக்கில் 1ம் எதிரி ஜெயகாந்தனிடமிருந்து வழக்குச் சொத்து எதுவும் கைப்பற்றப்பட வில்லை என்றால்சரிதான். அ.சா.8 கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அ.சா.9 அவரது உதவியாளர் 01.12.2018 அன்று காலை 9.00 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் அது தவறு. 01.12.2018 அன்று 1ம் எதிரி ஜெயகாந்தன் மத்திய சிறையில் இருந்தார் என்றால்சரிதான். கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அவரது உதவியாளர் முன்பு எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்த சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது விசாரணையில் சாட்சிகள் 1ம் எதிரியை சம்பவ இடத்தில் பார்த்ததாக சொல்லவில்லை என்றும், அதன் காரணமாக தான் 1ம் எதிரியை பொறுத்து அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்றும் சொன்னால்சரிதான். 4,5,7 எதிரிகள் காவல்துறை காவலில் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1, 2, ,3 6, 8 எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் 1, 2, ,3 6, 8 எதிரிகளின் குற்ற செய்கை தெரியவந்ததால் சேர்த்துள்ளேன். 1, 2, ,3 6, 8 எதிகளிடமிருந்து வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட வில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்றத்திற்கு முதல்தகவல் அறிக்கையை 20.11.2018 அனுப்பியுள்ளார்கள் என்றால்சரிதான். அ.சா.1 புகாரில் 2 ம் பக்கத்தில் 19.11.2018 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். 18.11.2018 ல் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், 19.11.2018 ல் தான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும் சொன்னால்சரியல்ல. புகாரில் குறிப்பிட்ட தொகை காணாமல் போனதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் ரூ.52,940/- காணாமல் போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். புகாரில் தொகை குறிப்பிடப்படாத நிலையில் முதல்தகவல் அறிக்கையில் தொகை குறிப்பிட்டுள்ளது ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதால் தான் இந்த குழப்பம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் சந்தானதுறை சம்பவத்தன்று வேலயில் இருந்தது சம்பந்தமாக ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை. அதுபோல சம்பவத்தன்று கடையின் மொத்த வியாபாரம் எவ்வளவு சம்பந்தமாக நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. டாஸ்மார்க் கடையில் முதல் நாள்

வசூல் தொகையை மறுநாள் வங்கியில் செலுத்திவிடுவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தவரை சம்பவத்தன்று உள்ள வசூல் தொகையை மறுநாள் வங்கியில் செலுத்தியது சம்பந்மாக நான் ஆவணங்களை பார்வையிடவில்லை. அ.சா.ஆ.,1 புகாரில் எதிரிகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால்சரிதான். இந்த வழக்கு சம்பவத்தில் எதிரிகளுக்கு எப்படி தொடர்புள்ளது என்று எனக்கு முதன்முதலாக எப்படி தெரியவந்தது என்றால் குளித்தலை வழக்கிலும் சோமரசன்பேட்டை வழக்கிலும் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில எனக்கு தெரியவந்தது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை நான் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திலிருந்தும் நீதிமன்றத்திலுந்தும் நான் பெறவில்லை என்றால் இல்லை சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திலிருந்து எனக்கு ஒப்புதல் வாக்குமூலம் வரப்பட்டது. சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர் எழுத்துப்பூர்வமாக இந்த சம்பவம் தொடர்பாக எந்தக் கடிதமும் அனுப்பவில்லை என்றால் சரிதான். எல்லாக் காவல் நிலையங்களிலும் கூட்டாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதால் தான் இந்த குழப்பம் ஏற்பட்டது என்றால்சரியல்ல. பதிவெண் இல்லாத ஒரு ஸ்பெலண்டர் இருச்சக்கர வாகனத்தில் 3, 8 எதிரிகள் வந்ததாக இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இருச்சக்கர வாகனத்தை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான் மேற்படி வாகனம் குளித்தலை வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ளது. குளித்தலை வழக்கில் மேற்படி வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அ.சா.2 சம்வத்திற்கு அடுத்த நாள் கரூர் அப்போல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்றால்சரிதான். அவர் மருத்துவமனையில் சேர்ந்த போது அடையாளம் தெரியாத 3 நபர்கள் தன்னை கட்டையால் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால்சரிதான். அ.சா.ஆ 2ல் வழிப்பறி செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் அவ்வாறு விபத்துப் பதிவேட்டில் பதிவிட மாட்டார்கள். பொதுவாக மருத்துவ மனையில் தாக்கப்பட்டதாக சிகிச்சைக்கு ஆஜராகும் போது அந்த மருத்துவமனையில் இருந்து காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்படும் என்றால்சரிதான்.இந்த வழக்கில் அது போன்று காவல்நிலையத்திற்கு தகவல் வந்ததா என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. வந்த தகவலின் அடிப்படையில் பெறப்பட்ட வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் முன்னிடப்படவில்லை என்றால்சரியல்ல. அ.சா.2 19.10.2018 அன்று அவரே மருத்துவமனையில் இருந்து விட்டிற்கு சென்றுவிட்டு 22.10.2018 ல் மீண்டும் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்றால்சரிதான். அதனால் சாட்சி 2 ற்கு ஏற்பட்ட காயங்கள் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டிருக்க வாய்புள்ளது என்றால்சரியல்ல. 30.11.2018 அன்று எதிரிகள் காவல்துறை காவலில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். 01.12.2018 அன்று மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் நான் சொன்ன தேதியில் பெறப்படவில்லை என்றும் அது என்னால் 01.12.2018 அன்று தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால்

தான் நான் மேற்படி ஒப்புதல் வாக்கமூலங்களை நீதிமன்றதத்திற்கு காலதாமதாக அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் 4, 5, 7 எங்கள் கட்டுப்பாட்டில் இருந்த போது அ.சா.1ற்கு அடையாளம் காட்டியதின் அடிப்படையில் தான் அ.சா.1 மேற்படி எதிரிகளை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டியுள்ளார் என்றால் சரியல்ல. சிந்தாமணிப்பட்டி காவல்நிலையத்திற்கும் குளித்தலை நீதிமன்றத்திற்கும் சுமார் 30- கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். எதிரிகள் தாமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்திருந்தால் எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருக்கலாம் என்றும் நான் எதிரிகளை கட்டாயப்படுத்தி ஒப்புதல் வாக்கமூலம் பெற்றுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால்சரியல்ல. எதிரிகள் வீட்டு ஓட்டு தாழ்வாரத்தில் இருந்து பணம் கைப்பற்றினேன். சராசரி மனிதன் ஓட்டு தாழ்வாரத்தில் பணத்தை வைக்க மாட்டான் என்றால் சரியல்ல. அ.சா.5 முனியப்பன் சம்பவம் நடந்த அன்றே காவல்நிலையம் வந்து தகவல் சொல்லியதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.9 காவல்நிலையம் சென்று அனைத்து ஆவணங்களிலும் கையொப்பம் செய்ததாகவும், இந்த சம்பவம் சம்பந்தமாக வேறு எங்கும் செல்லவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. டாஸ்மார்க் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை. கைப்பற்றப்பட்ட வாகனங்களின் உரிமையளார் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் பார்வையிடவில்லை. அ.சா.1 சம்பவத்தன்று மைலம்பட்டி மருத்துவமனை சென்றதாக கூறியுள்ளது பற்றி எனது விசாணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சம்பவ இடம் செல்லாமல் பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை இது பொய்யாக புனைப்பட்ட வழக்கு என்றால்சரியல்ல.

ஓம் / முகமது இத்ரிஷ்

M SHUNMUGA KANI

Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2022.08.08 14:51:02 +0530

சார்பு நீதிபதி,

குளித்தலை.